# மதுரை விமான நிலையத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பிரமாண்ட வரவேற்பு!

## அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் கழகத்தினர் திரண்டனர்!



மதுரையில் நடைபெற உள்ள கழக மாநில பொதுக்குழு கூட்டத்தில் பங்கேற்க விமான மூலம் வருகை தந்த கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை மதுரை விமான நிலையத்தில் வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி வரவேற்றார். உடன் கழக பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர் பழனிவேல் தியாகராஜன் உள்ளிட்டோர் உள்ளனர்.



பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக மதுரைக்கு வருகைதந்த முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நேற்று (31.5.2025) மதுரை விமான நிலையத்தில் பொதுமக்கள் மற்றும் கழகத்தினர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.



பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக மதுரைக்கு வருகைதந்த முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நேற்று (31.5.2025) மதுரை விமான நிலையத்தில் பொதுமக்கள் மற்றும் கழகத்தினர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.



பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக மதுரைக்கு வருகைதந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நேற்று (31.5.2025) மதுரை விமான நிலையத்தில் பொதுமக்கள் மற்றும் கழகத்தினர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

### காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில்-அனைத்துக் கிளைகளிலும்

## முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவப் படத்திற்கு மலர்அஞ்சலி!

### கழகத்தினருக்கு - மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

**காஞ்சிபுரம், ஜீன் 1-**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளான ஜீன் 3ஆம் தேதியை செம்மொழி நாளாக கொண்டாடிட வேண்டும் என்று அறிவித்த, தமிழக முதல்வர், கழகத்தலைவர் தளபதி அவர்களின் கட்டளையை ஏற்று, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து கிளைகளிலும் உள்ள கழக கொடி கம்பங்கள் முன்பு, ஜீன்3 அன்று காலை முத்தமிழறிஞர் கலைஞர் திரு உருவப் படத்தை வண்ண வண்ண மலர்களால் அலங்கரித்து வைத்து கழகத்தினர் அனைவரும், மலர் தூவி, மலர் அஞ்சலி செலுத்திட வேண்டுமென்றும், 41 ஆதரவற்றோர் இல்லங்களில் அன்று பகல் அறுசுவை உணவு வழங்கி செம்மொழி நாளாக கொண்டாடிட வேண்டும் என்றும், மாவட்ட செய லாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை :

மறைந்தும், மறையாமல், தமிழக மக்களின் இதயங்களில் நீக்கமற நிறைந்திருக்கும் நம்முடைய உலக தமிழினத்தின் ஒப்பாரும் மிக்காரும் இல்லா தனிப்பெரும் தலைவர், பல இந்திய பிரதமர்களையும், ஜனாதிபதிகளையும் உருவாக்கி, இந்திய அரசியல் வரலாற்றில் நீங்கா இடம் பெற்ற பிதாமகன், திராவிட சூரியனாக திகழ்ந்த நம் நெஞ்சம் நிறைந்த தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான ஜீன் 3ஆம் தேதியை,



செம்மொழி நாளாக கொண்டாடிட வேண்டும் என்று, நாம் நாளும் போற்றி வணங்கும் நம்முடைய ஒப்பற்ற தலைவர் தமிழ்நாடு முதல்வர் - தலைவர் தளபதி அவர்களின் அன்புக்கட்டளையை ஏற்று,

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் விழாவை, வருகிற ஜீன் 3ஆம் தேதி அன்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் முழுவதும், கழக தொண்டர்களின் இல்ல விழாவாக - செம்மொழி நாளாக பட்டிதொட்டியெங்கும் கோலகலமாக கொண்டாடப்பட உள்ளது.

நம்முடைய ஒப்பாரும் - மிக்காரும் இல்லா அன்புத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, ஜீன் 3ஆம் தேதி காலை 9.00 மணியளவில் மாவட்டம் முழுவதும் ஒன்றிய நகர பகுதி பேரூர்களில் உள்ள அனைத்து கிளைகளிலும் கழக கொடி தோரணங்களைக் கட்டி,

கழக கொடிக் கம்பங்கள் இருக்குமிடங்களில் முத்தமிழறிஞர் கலைஞர் திருஉருவப் படத்தை வண்ண வண்ண மலர்களால் அலங்கரித்து வைத்து, மலர் தூவி மலர் அஞ்சலி செலுத்தி இனிப்புகளை வழங்கி, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டமே விழாக் கோலம் காணுகின்ற வகையில், நம்முடைய உயிரனைய தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 - வது பிறந்தநாளை மிகவும் பிரம்மாண்டமான முறையில் எழுச்சியுடன் கொண்டாடிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள 41 முதியோர் இல்லம், கருணை இல்லம் பார்வையற்றோர் பள்ளி - மாற்றுத் திறனாளிகள் தங்கும் இல்லம், மனநலம் குன்றியோர் தங்கும் விடுதி, தொழுநோயாளிகள் இல்லம் ஆகியவற்றில் தங்கியுள்ள ஆதரவற்றோர்கள் அனைவருக்கும் ஜுன் 3ஆம் தேதி அன்று பகல் அறுசுவை உணவு வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

மேலும், கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் விழாவை மாவட்டம் முழுவதும் இரத்த தான முகாம் மருத்துவ முகாம் கண் சிகிச்சை முகாம் நடத்துதல், மரக் கன்றுகளை நடுதல், ஏழை எளியவர்களுக்கு வேட்டி சேலை வழங்குதல், ஏழை எளிய பள்ளி மாணவ மாணவியர்களுக்கு இலவச நோட்டுப் புத்தகங்களை வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு மக்கள் நலத்திட்ட உதவிகளையும் வழங்கி, கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாள் விழாவை மிகவும் கோலாகலமான முறையில் கொண்டாட ஏற்பாடுகளை செய்துள்ளோம்.

தமிழகத்திற்கும் கழகத்திற்கும் கவசமாய் திகழ்ந்து மறைந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழினத்திற்காகவும் தமிழ்நாட்டு மக்களுக்காகவும் ஆற்றிய அரும்பெரும் சாதனைகளை விளக்கியும், தமிழகத்தின் முதல்வராக பொறுப்பேற்று மக்கள் மனம் மகிழும் வகையில் நல்லாட்சி நடத்தி இந்தியாவின் No.1 முதல்வர் என்ற வரலாற்று சாதனையை படைத்து,

கடந்த 4ஆண்டு பொற்கால ஆட்சியில் எண்ணிலடங்கா திட்டப் பணிகளை நிறைவேற்றி தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு சென்று, வெற்றி மகுடத்தில் நிலை நிறுத்தி சாதனை படைத்த சரித்திரத் தலைவர் தளபதி தலைமையிலான மக்கள் நலன் காக்கும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு கால சாதனைகளை விளக்கியும்,

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றிய - நகர -பகுதி - பேரூர் வாரியாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் விழா மற்றும் கழக அரசின் 4 ஆண்டு சாதனை விளக்க மாபெரும் பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட உள்ளது.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.





மதுரையில் இன்று நடைபெறவிருக்கும் பொதுக்குழுக் கூட்டத்திற்கான ஏற்பாடுகளை கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. பார்வையிட்டார். உடன் மதுரை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் அமைச்சருமான பி.மூர்த்தி, தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு. மணிமாறன் ஆகியோர் உள்ளனர்.

### பட்டுக்கோட்டை என்.சரவணன் தலைமையில் – முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாளை முன்னிட்டு

## குவைத் தளபதி பேரவை சார்பில் மாபெரும் மருத்துவ முகாம்!

### காணொலி வாயிலாக அமைச்சர் சா.மு.நாசர் தொடங்கி வைத்தார்!

### பூங்கோதை ஆலடி அருணா, எம்.எம்.அப்துல்லா வாழ்த்துரை!

ஃபஹாஹில் (குவைத்), ஜுன் 1-

அயலக திராவிட முன்னேற்றக் கழகம் குவைத் தளபதி பேரவை சார்பில், ஃபஹாஹில் ஷிஃபா அல் ஜசீரா மருத்துவமனையில், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு மாபெரும் இலவச மருத்துவ முகாம், இப்பேரவையின் தலைமை நிலையச் செயலாளர் உ.கு.சிவக்குமார் வரவேற்புரையில் - செயலாளர் அம்மையப்பன் செல்வம், முதன்மைச்செயலாளர் மண்டலம் மதிவாணன், அமைப்புச் செயலாளர் பழனி நல்லரசு, கலை இலக்கிய அணிச் செயலாளர் அருவி கவிஞர் ஆனந்த ரவி, கொள்கை பரப்புச் செயலாளர் அன்பழகன் ஆகியோர் முன்னிலையில்

தலைமை ஒருங்கிணைப்பாளர் பட்டுக்கோட்டை என்.சரவணன் தலைமையில் நடைபெற்றது.

மருத்துவ முகாமை காணொலிக் காட்சி வாயிலாக தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் ஆவடி சா. மு. நாசர் தொடங்கி வைத்தார்.

மாநிலங்களவை உறுப்பினரும் கழக அயலக அணியின் செயலாளருமான எம். எம். அப்துல்லா, முன்னாள் அமைச்சர் மாநில சுற்றுச் சூழல் அணியின் தலைவர் டாக்டர் பூங்கோதை ஆலடி அருணா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இலவச மருத்துவ முகாமில் நூற்றுக்கும் மேற்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

ஷிஃபா அல் ஜசீரா மருத்துவக் குழுவினர் குணசீலன் பிள்ளை பொது மேலாளர், ஷிஃபா அல் ஜசீரா மருத்துவ மையம், ஃபஹாஹீல்,

ஜெயகிருஷ்ணன், மருத்துவ இயக்குனர், டாக்டர்.டேனியல் தேவபிரசாத் இன்டார்னிஸ்ட், பிபிதனனன் மருத்துவர், எலும்பியல் நிபுணர்,

சபிதா கண் மருத்துவர், வெங்கடேஷ் கண் மருத்துவர்,சனி மோல் பொது மருத்துவர், பிரபுராஜ் பல் மருத்துவர், ஆஷா ஆகியோர் மருத்துவ முகாமில் பல்வேறு சிகிச்சைகள் வழங்கினர்.

கழகத்தின் மூத்த முன்னோடிகள், குவைத்தில் பணிபுரியக்கூடிய பணியாளர்கள் என மருத்துவ முகாமில் நூற்றுக்கும் மேற்பட்டோர் பயனடைந்தனர்.

முருகன், சிவராமன்,சாமிநாதன், பால்ராஜ் , ராமன், ஜியாவுதீன், அன்வர், முகமது கனி, கூட்டணிக் கட்சிகளான ம.தி.மு.க., மணிவாசகம், காங்கிரஸ் கட்சி செல்வேந்திரன்,வி.சி.க .மகிழன் செல்லத்துரை, ம.ம.க. லத்தீப் கம்ருதீன்,ம.ஜ.க. சதக்கத்துல்லா அன்சாரி இந்திய கம்யூனிஸ்டு கட்சி மன்னை ராஜேந்திரன்,

ஓட்டுனர் சேவை மையம் சையது ஜாபர்,தமிழ் மக்கள் சேவை மையம் அலிபாய் ரசீது சமூக ஆர்வலர் கொடுந்துறை அலிபாய் ரிஸ்வான் சத்திரமனை அசன் முகமது முபாரக் ஸ்டீபன் அமீர் ஜான் தமிழர்கள் ஓட்டுனர் சேவை மையம் ஆரிப் உசேன், பாண்டியன் குவைத் கிறிஸ்துவ திருச்சபையின் தலைவர் ஜான் ரமேஷ் கிளாட்வின் பாக்யராஜ் உள்ளிட்ட கழக உடன்பிறப்புகள், கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகள், தமிழ் அமைப்பின் பிரதிநிதிகள் என கலந்து கொண்ட அனைவருக்கும் கேக் வெட்டி இனிப்புகள் வழங்கப்பட்டது.

இறுதியாக அமைப்பாளர் போத்தியப்பன் நன்றி கூறினார்.